DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -10

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.ஜெயா | Caste: |
| Husband's Name: | திரு. கொளஞ்சி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 4th day of January -2024.

**A1 , A2, A5 to A9, A11, A13 to A18 present. A3 produced.**

**Date: 04.01.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்டம் வங்குடி கிராமத்தில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். என் கணவர் கொளஞ்சி காலமாகிவிட்டார். இவ்வழக்கில் கொலைசெய்யப்பட்ட 5 நபர்களையும் எனக்கு தெரியும். காசிநாதன் எனது சின்ன மாமனார். இறந்துபோன மற்ற நான்கு நபர்கள் எனது கொழுந்தனார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள்.

16.05.2008 அன்று காலை 10.00 மணியளவில் மல்லிகா என்பவரது வீட்டிற்கு வேலை கேட்பதற்காக போய்இருந்தேன். அவரது வீட்டு வாசலில் சிமெண்ட் ரோடு இருந்தது. அப்போது அங்கு மல்லிகாவும், இறந்துபோன பிரபுவின் தாயார் பானுமதியும் அங்கு இருந்தார்கள். அப்போது மகாலிங்கம், ராஜலிங்கம், பிரபு, சுரேஷ், அமிர்தலிங்கம் ஆகியோர் வண்ணாங்குளத்தில் குளித்துவிட்டு திரும்ப வந்துகொண்டிருந்தார்கள். அப்போது பால்சாமி வீட்டு சந்திலிருந்து எதிரிகள் பழனிசாமியும், பிரபாகரனும் கத்தியை

எடுத்துக்கொண்டு வந்தார்கள். முதலில் எதிரி பழனிசாமி பிரபுவை ஒரே வெட்டாக வெட்டிவிட்டார். பின்னர் எதிரி பிரபாகரன் பிரபுவை வெட்டினார். பிரபு அந்த இடத்திலேயே துடிதுடித்து இறந்துவிட்டார். எதிரி பழனிசாமி பிரபுவின் கழுத்தை அறுத்து தலையை துண்டாக எடுத்துவிட்டார்.

அத்தலையை எதிரிகள் பழனிசாமியும், பிரபாகரனும் எடுத்துசென்று காளியம்மன் கோவிலின் பின்புறம் வைத்துவிட்டார்கள். நாங்கள் பயந்துகொண்டு அழுந்துகொண்டிருந்தோம். எதிரிகள் திருஞானமும், ரவிச்சந்திரனும் ராஜலிங்கத்தையும், சுரேசையும் துரத்திகொண்டு ஓடினார்கள். சாட்சி எதிரிகள் திருஞானம், ரவிசந்திரன், பழனிசாமி ஆகியோரை சரியாக அடையாளம் காட்டுகிறார். பின்னர் நாங்கள் பூராசாமி கடைக்கு பக்கத்தில் சென்றோம். அங்கே காசிநாதன், ஜானகி, தர்மலிங்கம் ஆகியோர் விழுந்துகிடந்தார்கள்.

தர்மலிங்கத்தின் உடலில் தலை இல்லை. காமராஜ் வீட்டு சந்து பகுதியில் மகாலிங்கம் இறந்துகிடந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>13–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் வங்குடிகிராமத்தில் காளியம்மன் கோவில் வீதியில் குடியிருக்கிறேன். கொலை நடந்து 2 மணி நேரம் கழித்து சம்பவ இடத்தில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது எதிரிகள் திருஞானமும், ரவிச்சந்திரனும், ராஜலிங்கத்தையும், சுரேசையும் துரத்திகொண்டு ஓடினார்கள் என்று சொல்லியிருக்கிறேன்.

நான் எனது முதன்மை சாட்சியத்தில் என்ன சங்கதிகளை சொல்லியிருக்கிறேனோ அதே சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியிருக்கிறேன். எனது முதல் விசாரணையில் எனக்கு தெரிந்த மற்றும் நான் பார்த்த சங்கதிகள் அனைத்தையும் சொல்லியிருக்கிறேன். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. (சாட்சி மிகவும் கோபத்துடன் நான் பார்த்ததை தான் சொல்லுகிறேன் என்று சொல்லுகிறார்).

**6 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையானது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**<u>3–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கொலை நடந்து சுமார் 1–1/2 மணி நேரத்தில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தபோது பகல் 11.00 மணி இருக்குமா என்றால் இருக்கலாம். போலிசார் சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்தார்கள். வீடியோவும் எடுத்தார்கள். போலிசார் மோப்ப நாய்கள் எதனையும் சம்பவ இடத்திற்கு அழைத்துவரவில்லை. போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கவில்லை. பழனிவேலு மற்றும் நடராஜன் ஆகியோர்களிடம் கையொப்பம் பெற்றார்கள்.

இறந்துபோன நபர்கள் எனது உறவினர் என்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 ஆகியோர் தரப்பில் வழக்கறிஞர் திரு.நாராயணன் இன்று வக்காலத்து தாக்கல் செய்து ஆஜர்.அவர் குறுக்குவிசாரணைக்கு தயாராக இல்லை. எனவே அவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.